Form-39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
C.C.No. 107/2011

Deposition of witness for: PW - 7

| | | | |
|---|---|---|---|
| Name | : மாரிமுத்து | Father/Husband Name | : பூஞ்சோலை |
| Age | : | Calling | : |
| Date | : 11.06.2026 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 11 day of 06.2026.

( சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை பதிவு செய்யப்பட்டது ).

**அரசுதரப்பில் முதல்விசாரணை**

நான் தமிழ் நாடு காவல் துறையில் சார்பு ஆய்வாளராக பணியாற்றி ஒய்வு பெற்று தற்போது கொண்டையம்பட்டி கிராமத்தில் குடியிருந்து வருகிறேன்.

கடந்த 09.07.2009 ம் தேதி 22.30 மணிக்கு நான் கீழவளவு காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக நிலையப்பொறுப்பில் இருந்தபோது திருமதி.பரமேஷ்வரி என்பவர் நிலையத்தில் ஆஜராகி கொடுத்த எழுத்துபூர்வமான புகாரை பெற்று அதன் புகாரின் தன்மைகேற்ப நிலைய குற்ற எண் 152/2009, இதச பிரிவு 379 ன்கீழ் எதிரிமீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். **(அந்த முதல் தகவல் அறிக்கை அசாஆ 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது ).** பின்னர் முதல் தகவல் அறிக்கையுடன் புகாரினை இனைத்து கனம் நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்தும், ஒரு நகலை எனது புலன்விசாரணைக்கு எடுத்துக்கொண்டு

மறுநாள் காலை 07.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சம்பவ இடத்தை பார்வையிட்டு மகாலிங்கம் மற்றும் ராமசாமி முன்னிலையில் பார்வை மகஜர் மற்றும் மாதிரிவரைபடம் தயார் செய்தேன். **(அந்த மாதிரி வரைபடம் அசாஆ 7 ஆக குறியீடு செய்யப்படுகிறது ).**

அன்றையதினமே சம்பவ இடம் சென்று சாட்சிகள் பரமேஷ்வரி, கஜேந்திரன், அழகர்சாமி, தெய்வேந்திரன், பார்வை மகஜர் சாட்சிகள் மகாலிங்கம்,

ராமசாமி, ஆகியோர்களை தனிதனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். நான் பணிமாறுதலில் சென்றதனால் மேல்விசாரணைக்காக வழக்குகோப்பினை சார்பு ஆய்வாளர் திருமதி.மாரீஸ்வரியிடம் ஒப்படைத்தேன். வழக்கு சம்மந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரி ஆஜர்**

**எதிரிதரப்பில் குறுக்குவிசாரணை**

இவ்வழக்கில் திருட்டுபோன கீழையூர், சூரக்குடி கும்பாபிஷேகம் பிரசாதம் வாங்கிவிட்டு வீட்டிற்கு சென்று பார்த்தபோது தெரியவந்தது என்றால் சரிதான். கீழையூருக்கும், கீழவளவு காவல் நிலையத்திற்கும் சுமார் 2, 3 கிமீ தூரம் இருக்கும் என்றால் சரிதான். இவ்வழக்கில் காலையே தாலி செயின் காணவில்லை என்றும், அவரது மருமகன் பார்த்து சொன்னதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். சம்பவமானது காலை 10.00 மணிக்கு நடந்தது என்றால் 10.00 மணிக்கு சம்பவம் நடந்தது, ஆனால் அவரது மருமகன் கஜேந்திரன் வீட்டில் பகல் 11.00 மணிக்குதான் நகை காணவில்லை என கஜேத்திரன் புகார்தாரரிடம் கேட்ட பின்னர்தான் தெரிந்துகொண்டார். இவ்விழக்கின் புகாரானது 10 மணி நேர கால தாமதமாகத்தான் புகார் கொடுக்கப்பட்டது என்றால் கோவில் மற்றும் சுற்று வட்டாரத்தில் தேடி பார்த்து பின்னால் புகார் கொடுத்தனால் அவ்வாறு காலதாமதம் ஏற்பட்டுள்ளது. இவ்வழக்கின் முதல் தகவல்அறிக்கையில் காலதாமத்திற்காக காரணத்தை குறிப்பிடவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கில் நான் சாட்சியாக விசாரித்துள்ள அனைவரும் புகார்தாரரின் மருமகன்கள் என்றால் சரிதான்.

2) நான் சம்பவ இடம் சென்று அக்கம், பக்கதினரை இவ்வழக்கின் சாட்சியாக விசாரித்துள்ளேனா என்றால் இல்லை.